Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஐப்பசி மீ 28 உ. புதன்கிழமை (14 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 25 ஓசை 260

## யாழ். ஆஸ்பத்திரியில் பார்வையாளர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு நடைமுறையில் உள்ள அனுமதிப்பத்திர முறையினால் பொது மக்கள் பெரும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் போது பார்வையிடும் நேர அட்டவணையிலும் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒருநோயாளியைப் பார்வை (4ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் தமிழரை முற்றாக விரட்ட

# சிவில் நிர்வாகப் போர்வையில் சிங்களக் குடியேற்றம்

## இழப்பைத் தடுக்க தமிழர் முன்வர வேண்டும் -ரூபன்



(திருமலை)

திருமலை மாவட்டத்தில் இராணுவ பயங்கரவாதத்தால் தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்துவரும் இவ்வேளையில், சிவில் நிர்வாகம் என்ற பெயரால் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய சிங்களக் குடியேற்றங்களினால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் இழப்பைத் தடுக்க அனைத்துத் தமிழ் மக்களும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபன் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில்;

திருக்கோணமலை மாவட்டத்தை முற்றாக சிங்களமயமாக்கும் திட்டத்தை சிறிலங்கா அரசு மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. பல்வேறு அழுத்தங்கள் மூலமாகவும், தமிழ் மக்களை திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து வெளியேற்ற தன்னாலான சகல முயற்சிகளையும் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகின்றது. பாரம்பரியமாக இந்த மாவட்டத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் இராணுவ பயங்கரவாதத்தினால் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அகதிகள் நிலையில் வாழும் இந்த மக்களின் மீது தமது இனப்படுகொலையைத் தொடர்வதன் மூலம் அவர்களை அந்த மாவட்டத்தை விட்டே துரத்திவரும் அதே வேளை பிறமாவட்டங்களில் இருந்து சிங்கள மக்களைக் கொண்டுவந்து திருமலையை முழுமையாகச் சிங்களப் பிரதேசமாக்கத் தீவிரப்படுத்தப்படுகின்றன. இதற்கு வசதியாக மேலதிக சிங்கள இராணுவ முகாம்களையும், ஊர்காவற்படை முகாம்களையும் அரசு அமைத்து வருகின்றது. அத்துடன் சிவில்நிர்வாகத்தை அமுல் செய்கிறோம் என்ற பெயரில் மாவட்ட நிர்வாகம் சிங்களமயப்படுத்தப்படுகின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் காட்டிக் கொடுப்பு; தமிழர் ஒருவர் பலி

வவுனித்தீவில் புளொட் இயக்கத்தினரால் காட்டிக் கொடுக்கப்பட்ட பொதுமகன் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனித்தீவில் வைத்து புளொட் இயக்கத்தினர் பொதுமகனொருவரை இராணுவத்தினருக்கு அடையாளம் காட்டிக் கொடுத்ததில் அந்தநபர் இராணுவத்தினரால் பலமாகத் தாக்கப்பட்ட பின் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். (மு)

## பல முனைகளில் முயன்ற இராணுவ முயற்சி முறியடிப்பு

(தெல்லிப்பளை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் வலிகாமம் வடக்கில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் பலபகுதிகளாலும் முகாம்களைவிட்டு வெளியேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் நடத்திய கடும் எதிர்த் தாக்குதலை அடுத்து முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

அன்றையதினம் கிருஷ்ணர் கோயிலூடாகக் கீரிமலைப் (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலால் ராணுவ வண்டி முற்றாகச் சேதம்

(மணலாறு)

இராணுவ வாகனத்தில் வந்த சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் நால்வர் படுகாயமடைந்தனர். அவர்கள் வந்த வாகனம் முற்றாக சேதமடைந்ததுடன், இவரின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கடந்த வெள்ளியன்று டொலர் பாமிற்கும் முந்திரிக்குளத்திற்கும் இடையில் லான்குரே (4ஆம் பக்சம் பார்க்க)

## சிதைவுற்ற யாழ். நகரப்பகுதி சுத்திகரிப்பு வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைகளின் தாக்குதல்களினால் சிதைந்து போயுள்ள யாழ். நகரப்பகுதியில் சுத்திகரிப்பு வேலைகளை யாழ். மாநகர சபை இன்று முதல் ஆரம்பிக்க உள்ளது.

நகரின் முக்கிய பகுதிகளில் இருந்தே முதல் கட்டமாகத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம்

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டஅறிக்கை நாளை 15ஆம் திகதி பிரதம மந்திரியும், நிதிமந்திரியுமான டி. பி. விஜயதுங்காவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஐந்தாவது ''சார்க்'' உச்சி மாநாட்டிற்கு கலந்து கொள்ள 19ஆம் திகதி மாலை தீவிற்குச் செல்லும் டி.பி. விஜயதுங்கா திரும்பியதும் இதற்கான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறும்.

## வடபகுதி மின்சார விநியோகம்; இராணுவ தலைமையகம் அசட்டை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு மின்சாரம் தடைப்பட்டுள்ள நிலைமை குறித்து கடந்த மாதமளவில் மின்சாரசபை அதிகாரிகளால் அனுப்பப்பட்ட அறிக்கைக்கு இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என வடமாகாண மின்சாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார். இதேபோல கூட்டுப்படைகள் தலைமையகம் வடபகுதி மின்சாரம் பற்றி அசட்டையாக இருப்பதாக யாழ். செயலக அதிகா (4ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம்

### கதிர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் சம்பவமொன்றில் நேற்று முன்தினம் காயமடைந்த போராளி கதிர் (மு. ஐங்கரன் வட்டுக்கோட்டை தெற்கு, சித்தன் கேணி) என்பவர் நேற்றுப் பகல் 12.30 மணியளவில் வீரமரணமடைந்துள்ளார்.

### மீனா

குப்பிளான் பகுதியில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த பெண் போராளி மீனா (சுதர்சினி, கரடிப்போக்கு, கிளிநொச்சி) என்பவர் நேற்று முன்தினம் வீரமரணமடைந்துள்ளார். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

### புடியான்

மஞ்சத்தொடுவாய், கல்லடி ஆகிய இரு பகுதிகளை நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினரும், புளொட் இயக்கத்தினரும் இணைந்து சுற்றி வளைத்துத் தேடுதலை மேற்கொண்டனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த புடியான்(மகிழந்தீவு)என்ற போராளி சயனட் அருந்தி வீரமரணமடைந்தார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## ஊறணியில் கிரனேட் வீச்சு; ஒரு படை பலி; ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

ஊறணி இராணுவ முகாமிற்கு வெளியே வந்த இரு சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் இரனெட் வீச்சை மேற்கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றவர் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஊறணி இராணுவ முகாமில் இருந்து சிவில் உடையில் வெளியே வந்த இரு இராணுவத்தினர் மீது முகாமில் இருந்து 200 யார் தூரத்தில் (4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்ட ஆசிரியர்கள் 15-ம் திகதி காரியாலயம் வரவும்

(திருமலை)

யூன் மாதம் ஏற்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து திருக்கோணமலையில் இருந்து தற்காலிக இடமாற்றம் பெற்று வெளிமாவட்டங்களில் இருக்கும் ஆசிரியர்கள் நாளை பதினைந்தாம் திகதி திருமலை கல்விக் காரியாலயத்திற்கு வரும்படி கோரப்பட்டுள்ளார்கள்.

அவ்வாறு சமுகம் கொடுக்காதவர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலானது தமிழ் உத்தியோகஸ்தர்களை முற்றாக (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் 1000 புலிகள்; வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் கடலோரப் பகுதிகளில் 1000க்கும் அதிகமான விடுதலைப் புலிகள் தங்கியிருப்பதாக தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சென்னையில் தெரிவித்தார் டில்லியில் வி.பி.சிங் அரசாங்கம் கவிழ்ந்தால் கலகம் செய்வதற்காகவே அவர்கள் வந்திறங்கியதாகவும் தெரிவித்த வாழப்பாடி தமிழகத்தில் புலிகளின் பயிற்சி முகாம் இருப்பதாகவும் தாம் முன்னர் கூறிய (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல 14 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B. 1580)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! எமது ஸ்தாபனம் மீண்டும் 60.ஸ்ரான்லி வீதியில் நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உததரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களும், பற்றறிகளும் விற்பனைக்குண்டு கிளை ஸ்தாபனம்: 153A, பலாலி வீதியிலும் நடைபெறுகின்றது. (B/1586)

### மில்க்வைற் தயாரிப்புகள்

மில்க்வைற் சலவைப் பவுடர் 50கிறாம் நீமியா உரம்-நீம் தூபம். யாழ். நகர் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக் கட்டிடத்தில் அண்ணா கோப்பிக் கடையிலும் கிடைக்கின்றன. மில்க்வைற். யாழ்ப்பாணம். (B/1585)

### தேவை

அனுபவமுள்ள ரீமேக்கர், சப்பிளை செய்வோர், திரும்பவும் ஆரம்பிக்கவுள்ள எமது ஸ்தாபனத்திற்கு உடனடியாகத் தேவை. தகுதியுள்ளவர்கள் நேரில் வரவும். பொம்பே ஜெய் சுவீற்ஸ், 260, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (R/833)


## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

குருநகரிலுள்ள (கமலா ஸ்ரோர்ஸ்) என்னும் கடை ஒன்றில் பொருள்கள் வாங்கச் சென்றவர் வெளியே சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்று திரும்பி வந்து பார்த்த போது சைக்கிளைக் காணாது திகைத்து நின்றார்.

கே. ரவி என்ற நபரின் ''ஈரோ'' சைக்கிள் ஒன்றே திருட்டுக்குள்ளானதாகும்.

## பிரதேச சபையிடம் பணமில்லை

(மானிப்பாய்)

வலி தென்மேற்கு பிரதேச சபை உப அலுவலகம் மானிப்பாய் இராமம் பல இலட்ச ரூபாய்களைக் கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் செலுத்த வேண்டியிருப்பதால் தற்போதைக்கு புதிய நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளமுடியாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

# புனித இடங்களில் உள்ள பள்ளிவாசல்கள் பிரச்சினைக்குத் தீர்வு
### – பாரதீய ஜனதா

(டில்லி)

இராமபிரான் பிறந்த இடமாகிய அயோத்தி, சிவனின் புண்ணிய ஸ்தலமாகிய காசி, கிருஷ்ணன் பிறந்த இடமாகிய மதுரா ஆகியவற்றில் உள்ள பள்ளிவாசல்கள் அகற்றப்பட்டு இந்துக்களுக் குரிய இடமாக தரப்பட்டால் ஒழிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என பாரதீய ஜனதாக் கட்சியும், விஸ்வஹிந்து பரிஷத்தும் அறிவித்துள்ளது.

அயோத்தியில் மீண்டும் இராமர் ஆலயம் கட்டும்பணி அடுத்த மாதம் 6 ஆம்திகதி தொடங்க இருப்பதாகவும் கடந்த சில வாரங்களாக களங்கப்படுத்தப்பட்ட கர்ப்பக் இருகம் இந்த மாதம் 28 ஆம் திகதி புனிதப்படுத்தப் படப்போவதாகவும் விஸ்வ ஹிந்துபரிஷத் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நாடெங்கிலும் நடத்தப்படவிருக்கும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்காக ஒரு லட்சம் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அறிவித்தது,

இதேவேளை பிரதமர் சந்திரசேகர் இருதரப்பினருக்கும் ஏற்ற தீர்வு ஒன்றைக் காண்பதற்கான யோசனைகளை மேற் கொண்டு வருகிறார்.

## பணமின்மையால் கொடுப்பனவில்லை

மானிப்பாய் இலங்கை வங்கியில் பணம் இல்லாத காரணத்தால் தற்போது பணக் கொடுப்பனவுகள் நிறுத்தப் பட்டுள்ளதாக அதன் முகாமையாளர் தெரிவித்துள்ளார் (ச)

# வன்னிப் பிரதேசத்தில் தொற்று நோய் ஆபத்து

முல்லைத்தீவு. கிளிநொச்சி பகுதிகளில் மலேரியா மூளைக் காய்ச்சல் நோய் வேகமாகப் பரவிவருறது இந்த நோயை குணப்படுத்தப்போதியமருந்து வகைகள் இல்லாததால் பலர் இறக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

வரட்சிக்குப் பின் ஏற்பட்ட மழையை அடுத்தும், நுளம்பு காட்டுப் பன்றிகளினாலும் மேற்படி நோய்கள் பவலாமென வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# தொழில் நுட்பக்கல்லூரி 19ஆம் திகதிமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி மீண்டும் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஆரம்பமாக உள்ளது. இந்த முடிவை கொக்குவிலில் அமைந்துள்ள இக்கல்லூரியின் அதிபரும் மாணவர்களும் ஆசிரியர்களுமாகக் கூடி தீர்மானித்துள்ளனர்.

பகல் நேர வகுப்புக்கள் யாவும் இம் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகின்றன. அதேவேளை மாலைநேர வகுப்புகள்யாவும் இம் மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் கல்லூரியின் நிரந்தர விரிவுரையாளர்களையும்பகுதி நேர விரிவுரையாளர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னதாக தம்மை வந்து சந்திக்குமாறு அதிபர் சி. இராஜேந்திரா வேண்டிக் கொண்டுளார். (லோ)

## யானைகளால் தொல்லை

(மாங்குளம்)

காட்டு யானைக் கூட்டங்களால் பயணிகளுக்குத் தொல்லை அதிகரிக்கிறது.

மாங்குளம் காட்டுப் பாதையூடாக பயணம் செய்யும் பயணிகளைக் காட்டு யானைகள் எதிர்பாராத விதமாகக் குறுக்கிட்டு துரத்திவருகின்றன.

யானையின் குறுக்கீட்டில் சிக்குண்ட கிளிநொச்சி பஸ் சாலை நடத்துனர் திரு.கார்த்திகேசு தங்கவேலாயுதம் (வயது 42) மயிரிழையில் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார். (82)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 – 11 – 1915

மறைவு 14 – 11 – 1989

### டாக்டர் வி. ஜே. ஞானநாயகம்

எங்கள் குலவிளக்கே ஏந்தலே எம்முயிரே!
உங்கள் நினைவாய் ஓராண்டு கழிந்ததையா
தங்களை நினைத்திருப்போம் தரணியிலென்றும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்.

இன்று (14-11-90) புதன் மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஞாபகார்த்த ஆராதனை நடைபெறும் இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

''ஞானமகால்''
88/2 பருத்தித்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(R/829)

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
அன்பார்ந்தவர்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னைமடியில் 25—10—1961

காலனடியில் 15—10—1990

### செல்வி லிங்கேஸ்வரி இளையதம்பி

''எங்கள் அன்புருவே, ஆருயிரே!
எங்கள் எண்ணங்களுக்கு எட்டாததேனோ?
எங்கள் வீட்டின் ஒளிவிளக்கே - லிங்கா
எங்கள் இதயங்களிலெல்லாம் என்றென்றும்
நீ ஒளிர்வாய்!

கந்தரோடை,
சுன்னாகம்.

உன்நினைவால் வாடும்
குடும்பத்தினர்.
(R/830)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06 – 03 – 1927

உதிர்வு 20 – 10 – 1987

அமரர்

### திரு. கிருஷ்ணர் நவரத்தினம்

(இளைப்பாறிய பிராந்திய அத்தியட்சகர், தபால் திணைக்களம்)

திதி: 14—11—1990

நினைவுகளுடன்...-

அந்நிய ஆக்கிரமிப்பின்
அவலங்களை -
ஆண்டு தோறும்
நினைவு
கூருவதற்காகவோ
எங்களை யெல்லாம் -
மாளாத்துயரில்
ஆழ்த்திவிட்டு
நீங்கள் -
மாண்டு போனீர்கள்?

சத்தமில்லாமல் நீங்கள்
சாய்ந்து விட்டீர்கள்

சத்தம்போட்டு
அழமுடியாமல்
நாங்கள் -
மாய்ந்து போனோம்!

நீங்கள் மறைந்து -
மூன்றாண்டுகள்
உருண்டோடி விட்டன
நாங்களோ -
இன்னமும்
உங்கள் நினைவுகளுடன்
உறவாடிக்
கொண்டிருக்கிறோம்.

''ஜெயந்தி''
பலாலி வீதி,
உரும்பராய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(R. 815)

### சிந்தனைக்கு

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி
தேவையை உணர்ந்து உதவத்தூண்டும்
உணர்ச்சியே அன்பு எனப்படுவது.

— அறிஞர் முதுமொழி


ஈழநாதம்

81, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 14-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# தேவை உணர்ந்து தேடிச் செய்வதே - சேவை

கிழக்கில் இருந்து தொடர்ச்சியாக வரும் துயரச் செய்திகள் பெரும் கவலை அளிப்பவையாக உள்ளன. கொலை - கொள்ளை - மானபங்கம் போன்றவற்றால் தமிழர்கள் தங்கள் வீடுவாசல்களையும், நிலபுலன்களையும் விட்டு காடுகளுக்குள் ஓடி அகதிகளாக உள்ளனர்.

இராணுவ நடவடிக்கையால் வீடுவாசல்களை இழந்தவர்கள் அகதிமுகாமிலும் தங்கியிருக்க முடியாத அளவுக்கு இராணுவக் கெடுபிடிகளும், முஸ்லிம் ஊர்காவற்படையின் கெடுபிடிகளும் காட்டிற்கு விரட்டி விட்டுள்ளன;

மேலும் பருவமழை அந்த மக்களை சித்திரவதை செய்யத் தொடங்கிவிட்டது. இந்தப் பருவ மழை கிழக்கில் ஜனவரி மாதம் வரையும் நீடிக்கும். இந்தப் பருவ மழையால் அகதிகளாக வெளிகளிலும் காடுகளிலும், மதகுகளிலும் வாழ்ந்த மக்கள் இருக்கவும், படுக்கவும் இடமில்லாமல் அவதியுறுகின்ற அவலநிலை. அத்தோடு நுளம்புப் பெருக்கம் - அதனால் மலேரியாப் பெருக்கம் – ஒழுங்கான, தரமான உணவின்மையால் வயிற்றோட்டம் போன்றவற்றால் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவிக்கின்றார்கள்.

இந்த அவலநிலையை கிழக்கு மாகாணத் தமிழர்கள் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக அனுபவிக்கின்றனர். இதேவேளை கிழக்கில் உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்களும், மனித நேய ஸ்தாபனங்களும் செயற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இவற்றின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இலங்கையில் செயற்படும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை தங்கள் கடமைகளை மறந்துவிட்டனவோ என எண்ணத்தோன்றுகின்றது.

போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக, வாழ வழியின்றித் தவிக்கும் மக்களுக்கு உதவுவது என்பதே செஞ்சிலுவைச்சங்கத்தின் பிரதான கடப்பாடாகும். ஆனால் கடந்த யூன் மாதம் பதினொராம் திகதி யுத்தம் தொடங்கியதில் இருந்து கிழக்கில் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் தனது கடமையைச் செய்யவில்லை எனத் தெரிய வருகின்றது.

இராணுவ நடவடிக்கைகள் அற்ற, சுதந்திரமாக நடமாடக்கூடிய பகுதிகள் என்பனவற்றில்தான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமோ தொண்டர் நிறுவனங்களோ செயலாற்றும் என்றிருந்தால் அதனால் அல்லலுறும் மக்களுக்கு தமது சேவைகளை வழங்குவது என இந்த ஸ்தாபனங்கள் கூறிக் கொள்வதில் எதுவித உண்மையும் அர்த்தமும் இல்லாததோடு, அவர்களின் சேவையால் பயனும் இல்லை.

இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் வட பகுதியில் - குறிப்பாக யாழ்ப்பாணக்குடா நாடு - செஞ்சிலுவைச்சங்கம் தன் செயற்பாட்டை விஸ்தரிப்பதால் இன்னலுறும் மக்களுக்குச் செய்யும் சேவை எனக் கூறிக் கொள்வதைவிட காடுகளிலும், வயல்களிலும் அகதிகளாக வாழும் மக்களுக்குச் செய்யும்சேவையே எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கில் தங்களது உதவி தேவையெனில் நகர்ப் புறங்களுக்கு வாருங்கள் எனத்தொண்டர் ஸ்தாபனங்கள் எதிர்பார்ப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது வினோதமான ஓர்செயலாகும். மக்கள் நகர்ப்பகுதிகளிலும், கிராமப்புற குடியிருப்பு பகுதிகளிலும் வாழமுடியாமை யாலேயே காடுகளை நோக்கி ஓடினார்கள். இவர்களை நகருக்கு வாருங்கள் உதவுகிறோம் என்பதுகொலைக்களத் திற்கு அழைக்கும்செயலுக்குஒப்பானதாகும். செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் சென்ற தமிழர்களே இறக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது அவர்களுக்கே தெரிந்தவிடயம். இந்த நிலையில் எவ்வாறு மக்கள் நகர்புறம் வருவார்கள்?

இந்த மனிதநேய ஸ்தாபனங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் விரும்பினால் தமது சேவையை மக்கள் அகதிகளாக வாழும் பகுதிகளுக்கு விஸ்தரிக்கலாம். உலகின் வேறு இடங்களில் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டபோது நடமாடும் நிலையங்கள் போன்றவற்றின் மூலம் இவர்கள் தமது சேவைகளை வழங்கியுள்ளார்கள்.

இன்று உலகினைப் பொறுத்து இலங்கையில் பல மனிதநேய ஸ்தாபனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள் செயற்படுவதனால், அகதி மக்கள் ஒழுங்காகப் பராமரிக்கப் பட்டுவருகின்றார்கள்என்ற ஒருமாயைநிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இங்கு அவற்றின் செயற்பாடோ மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் இந்த ஸ்தாபனங்கள் தமது செயற்பாட்டிற்கு சிறிலங்கா அரசாங்கமோ, இராணுவமோ கட்டுப்பாடு விதித்தால் அதனை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தினால் அவை நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலைவந்தால்வெளியேறுவதாலும் நட்டமில்லை. இருப்பதினால் இலாபம் இல்லை எனில் இருந்தென்ன, இல்லாமல் இருந்தென்ன?

அதைவிடுத்து அரசின் ஓர் 'ஏஜென்டாக' அவர்கள் சொல்வதைச் செய்யும் ஸ்தாபனங்களாக இருப்பின் இலங்கையில் தமிழ் மக்களின் அவலத்தை மூடி மறைக்கும் கருவியாக அவர்கள் செயற்படுவதாகவே எண்ணத் தோன்றும்.

# உதிக்கும் திசைநோக்கி

## உன்னத பயணம்

**13**

மட்டக்களப்பு மாவட்ட எல்லை நாம் இருந்த இடத்திலிருந்து மிக அண்மையில் தான். மட்டக்களப்பையும் திருக்கோணமலையையும் பிரிக்கும் எல்லை ஓர் ஆறு. இது மகாவலி கங்கையின் கிளை நதி. இந்த ஆற்றில் முதலைகள் நிறைய உண்டு. ஓர் இ.போ.ச. சாரதியை இங்குள்ள முதலையொன்று இழுத்துச் சென்றதாக ஏற்கனவே அறிந்திருந்தேன். வருடா வருடம் யாராவது ஒருவர் முதலைக் குப்பலியாவது வழக்கம் என்று சொன்னார்கள். ஆற்றின் ஓர் எல்லையான திருகோணமலை மாவட்டப் பகுதிக்குள் புகழ் பெற்ற முருகன் ஆலயம் ஒன்று உண்டு. வெருகல் கந்தசாமி கோயில் என்பதுஇதன்பெயர். இரு மாவட்டங்களின் எல்லையில் இருப்பதாலோ என்னவோ கிழக்கு மாகாணம் முழுவதும் இது புகழ்பெற்று விளங்குகின்றது.

ஆற்றைக் கடக்க உதவும் 'பாதை' ஒன்றின் உதவியுடன் நாம் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் வந்தோம். இந்த ஆறு 30 யார் தூரம் தான் இருக்கும், என்றாலும் நடந்து போக முடியாது. ஆழமான ஆறு. முதலைகளின் அபாயம் கூடுதல் என்பதால் பெரும்பாலும் எவரும் நீந்திக் கடக்க முயற்சிப்பதில்லை. அப்போது திரு. துரைநாயகம் இந்த இடத்தில் தான் 'முதலை வள்ளியை' முதலை பிடித்தது என்றார். எப்போது அந்தச் சம்பவம் நடந்தது என்றேன், பலவருடங்களாகி விட்டன. இந்த ஆலயத்தின் திருவிழாவின் போது தீக்குளிப்பதாக வள்ளி வேண்டிக்கொண்டாள். நேர்த்திக்கடனை என்ன காரணத்தாலோ அவளால்அதை நிறைவேற்ற முடியவில்லை. திருவிழாவுக்கு வந்த அவள் முகம் கழுவ ஆற்றில் இறங்கிய போதுதான் முதலைபிடித்தது. எல்லோரும் சேர்ந்து அவளைக் காப்பாற்றினோம். முதலை பிடித்ததால் சில காயங்கள் ஏற்பட்டன. ஆனால் அந்தக் காயத்துடனேயே வள்ளி தீக்குளித்தாள் என்றார்.

அது சரி முதலை பிடித்தால் தப்ப என்ன செய்ய வேண்டும்? என்றேன். அதன் வயிற்றுப் பக்கம் தடவினால் விட்டு விடும் என்றார். ஏன் வயிற்றுப் பக்கம் தடவ வேண்டும்? என்றேன். அது மென்மையான பகுதி. வயிற்றில் தடவினால் அது கூச்சத்தினால் விட்டுவிடும் என்றார்; முதலையைக் கண்டவுடனேயே பயம் வந்துவிடும். இதெல்லாம் சாத்தியமா? என்றேன். முதலை ஆபத்தானது தான். ஆனால் நீங்கள் நினைப்பது போல் பயங்கரமானதல்ல. ஆற்றுக்குள் முதலை இருப்பது ஒரு பொந்து போன்ற இடத்தில். ஆழமான அந்தப் பகுதியை பாளி என்பர். அந்தப் பாளிக்குள் போய் தடியால் தட்டி மீன் பிடிப்பவர்களும் உண்டு என்றார். ஏன் பாளிக்குள் முதலை கடிக்காதா? என்றேன். பாளிக்குள் கடிக்காது என்றார். பாளி ஓர்சமாதானப் பிராந்தியமோ? என்றேன். சிரித்தார். தொடர்ந்து பாளிக்குள் என்ன மீன் கூடுதலாக இருக்கும்? என்று கேட்டேன். விரால் தான் கூடுதலாக இருக்கும். மீன்பிடிப்பதற்கு இன்னொரு சுலபமான வழி உண்டு என்றார்.

என்ன வழி? என்றேன். மீன் உள்ள பள்ளங்களில் ஒரு கொடியைப் போடவேண்டும் என்றார். என்ன கொடி? என்றேன். கருந்தெவுளங்கொடி என்பது அதன் பெயர். அந்தக் கொடியில் ஒரு துண்டைப் போட்டால் மீன் மயங்கி வரும், மீனைப் பிடித்து எடுக்கலாம் என்றார். இதற்கு ஏதாவது விஞ்ஞான ரீதியான காரணம் இருக்கும் என்றேன். அதைப் பற்றித் தெரியாது. ஆனால் எமது அனுபவ உண்மை என்றார்.

இப்படிக் கூடுதலாக மீன் பிடிபட்டால் என்ன செய்வது? என்றேன். சூட்டுக் கருவாடு போடுவார்கள். வெயிலில் காய வைக்காமல் நெருப்பில் காய வைப்பது தான் இந்தக் கருவாடு செய்யும் முறை என்றார். தொடர்ந்து இந்த மாதிரி மீன் பிடிக்கும் போது சில முறைகள் உண்டு என்றார். அது என்ன? என்று கேட்டேன். கத்தியோ வேறு எந்த உலோகமோ கொண்டுபோகக் கூடாது; துப்பக் கூடாது என்றார். துப்பினால் என்ன நடக்கும்? என்றேன். துப்பினாலோ உலோகங்களைக் கொண்டு சென்றாலோ சித்திக்காது - மீன்கள் ஓடி விடும் என்றார். இந்தப் பாரம்பரிய நம்பிக்கைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை.

ஆற்றங்கரைகளில் நின்ற மக்களுடன் மாத்தயா அளவளாவினார்; அனைவருமே திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து இந்த மட்டக்களப்பு மாவட்ட எல்லை வரை வந்து குடிசை அமைத்து இருப்பவர்கள், சிலர் வெருகல் ஆலயமடத்தில்இருப்பவர்கள். தமக்கு உணவோ, மருந்தோ கிடைப்பதில்லை எனவும் அடிக்கடி செஞ்சிலுவைச் சங்கத்தினர் வந்து பதிந்து போகின்றார்கள். ஆனால் எந்த விதமான பிரயோசனமும் ஏற்படவில்லை என்றனர். அன்று 26-9-90 சண்டை தொடங்கி 3 மாதங்களாகி விட்டன. தமிழ் அகதிகள் என்றால் ஆமை வேகத்தில், ஆமை வேகம் என்பது கூடத் தவறு. நத்தை வேகத்தில் தான் காரியங்கள் நடைபெறுகின்றன. மக்களின்குறைகளை மாத்தயா கேட்டறிந்தார். அந்தப் பகுதி பிரதேசப் பொறுப்பாளரிடம் இங்கு எவ்வளவு மக்கள் உள்ளனர்? என்றார். வாகரை, கதிரவெளி, வெருகல் எல்லா இடமும் சேர்த்து முப்பதினாயிரம் அகதிகள் என்றார் பிரதேசப் பொறுப்பாளர்



"வெருகலில் அகதிகளுடன் திரு. மாத்தயா"

எஸ்.பி. அங்கு ஒரு பத்து வயதுச்சிறுவன் சுறுசுறுப்பாக ஓடி ஆடி வேலை செய்து கொண்டிருந்தான். அவனிடம் உனது பெயர் என்ன? என்று கேட்டேன். அவன் ''பிரபாகரன்'' என்றான்.

மாத்தயா அவர்கள் பொது மக்களோடு பேசிக் கொண்டு இருக்கும் போது எனது பார்வையைச் சுழலவிட்டேன். ஓலையால் வேய்ந்த கடை ஒன்று; அன்று திறக்கப்படவில்லை. தட்டியால் மூடியிருந்தது; அந்தக் கடைக்கு முன்னே ஒரு சிறுமியும் இரண்டு குழந்தைகளும் நின்றார்கள். ஆகச் சிறிய குழந்தை ஆண் குழந்தை. அந்தச் சிறுமியிடம் போய் மருமகள் உங்களது பெயர் என்ன? என்றேன் ராஜசுலோசனா என்றாள் சிறுமி. உங்களுக்கு எத்தனை வயது? என்றேன். பத்து வயது என்றாள். ஏன் இன்று கடை திறக்கவில்லை? என்றேன். ''இனிக் கடை திறக்க முடியாது. அப்பாவை முஸ்லிம் ஆட்களும் இராணுவமும் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்'' என்றாள்.

எங்கே பிடித்தார்கள்? என்றேன். வாழைச்சேனையில் என்றாள்; மட்டக்களப்பு மண்ணில் கால் வைத்தவுடனேயே முதன்முதல் கிடைக்கும் செய்தி இதுதானா?

(தொடரும்

# இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக
# சந்திரசேகர் டில்லியில் ஆலோசனை

(டில்லி)

இலங்கைப்பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் சந்திரசேகர் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் மத்திய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தமிழ் அகதிகளின் பிரச்சினை, இலங்கை இந்திய கூட்டுப் பொருளாதார கமிஷன், இலங்கை இந்திய அரசியல் உறவுகள்குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் முக்தீன் செடீன், பிரதமரின் இணைச் செயலாளர் ஆர்டென்ட், இலங்கை விவகாரங்களுக்கான இணைச் செயலாளர் ராஜன் சுபேந்தர் ஆகியோர் கலந்து கொண்டு பிரதமர் சந்திரசேகருக்கு இலங்கைப்பிரச்சினை குறித்து விளக்கமளித்தனர்.

இதேவேளை இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சியின் செயலாளர் இரா. அன்பரசு பிரதமர் சந்திரசேகரை சந்தித்து இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து தமது கவலையைத் தெரிவித்த அதே வேளை சில யோசனைகளையும் தெரிவித்தார். இவருடன் இலங்கைத்தமிழர்களின் பிரதிநிதிகள் சிலரும் சென்றிருந்தனர்.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்காஇராணுவத்தால் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்றும், இதனை பிரதமர் சந்திரசேகர் இலங்கை அரசிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு உரிய முறையில் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்றும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், பிரச்சினைக்கு தீர்வு காண எல்லாத் தமிழ்க்குழுக்களையும் புதுடில்லிக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அன்பரசு பிரதமரை கேட்டுக்கொண்டார்.

## யாழ். வைத்தியசாலையில் பெரும் நிதி நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் தற்போது பாரிய நிதி நெருக்கடி தோன்றி உள்ளதாக தெரிகிறது. நிதிப்பற்றாக்குறையால் அதிகாரிகள் தமது பிரிவுகளுக்கு போதிய பணம் இல்லாது பெரும் சங்கடங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது. ஏற்கனவே பத்துலட்சம் ரூபாவுக்குத் தேவையான பொருள்கள் வாங்கி வைத்தியசாலை திருத்த வேலைகள் ஆரம்பமாகியது.

தொடர்ந்து இதே நிதி நிலைமை திருப்திகரமற்றதாக இருக்குமானால் தற்போது நடைபெற்று வரும் திருத்தவேலைகள் மேலும் தாமதம் அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை வைத்திய சாலை ஊழியர்களின் சம்பளம் விடயமாகவும், திருத்தவேலைக்குத் தேவையான நிதியில் ஒரு பகுதியைத்தானும் பெற்று வருவது சம்பந்தமாகவும் கொழும்பு தலைமையகத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்காக யாழ்ப்போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஸ்பா சண்முகம் தலைமையில் நால்வர் அடங்கிய குழு ஒன்று கொழும்புக்குச் சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (லோ)

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
## வங்கியில் நிதி இருந்தும் பொருள்வழங்க முடியாத நிலை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்திற்கு வங்கியில் போதியளவு நிதி இருந்தும் அதனைப் பணமாகப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதனால் தம்மால் இப்பகுதி நுகர்வோரின் 4ஆம், 5ஆம், 6ஆம் இலக்க உணவுமுத்திரைகளுக்கு உணவுப் பொருள்களை வழங்கமுடியாத நிலை காணப்படுவதாகவும் இது தொடர்பாக தாம் அரசாங்க அதிபருடன் கடந்த ஐந்தாம் மாதம் தொடர்பு கொண்ட போதும் இன்று வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மேற்படி சங்கத் தலைவர் சி. சிவமகாராசா தெரித்தார். எதிர்வரும் டிசம்பர். மாதத்திற்குள் 10ஆம் இலக்க உணவு முத்திரை வரை விநியோகிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரித்தார். (ச)

**தமிழகத்தில்**

குற்றச்சாட்டை மேலும் வலியுறுத்திப் பேசினார்.

மத்திய அரசை வீழ்த்தியது போல் தமிழ் நாட்டிலும் தி. மு. க. ஆட்சியை வீழ்த்துவதே தமது திட்டம் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

**ஊறணியில்**

வைத்து விடுதலைப் புலிகளால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலால் இராணுவத்தில் ஒருவர் கொல்லப்பட்டும், மற்றவர் படுகாயமடைந்தும் உள்ளனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து, பலியான இராணுவத்தின் உடலை எடுக்கவந்த இராணுவத்தினர் பொதுமகனொருவரைக் கத்தியால் குத்தியுள்ளனர். அவர் படுகாயமுற்ற நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (மு)

## கட்டுவனில் மோதல்

நேற்றுக்காலை 10. 30 மணியளவில் கட்டுவன் பகுதியில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் தெல்லிப்பளைப்பகுதியை நோக்கி முன்னேற முற்பட்ட போது இவர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து முன்னேற முடியாத இராணுவம் முகாமுக்குத்திரும்பியது.

இந்தத் தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (ச)

## கோயிலுக்குச் சென்றவருக்கு துப்பாக்கிச் சூடு

(தெல்லிப்பளை)

நேற்றுக்காலை 10 30 மணியளவில் மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயிலைத் தரிசிக்கச் சென்ற எம். கந்தையா (75) என்பவர் இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு வலது பக்கத் தோள் மூட்டில் சூடுபட்டுள்ளது. (ச)

## மகப்பேற்றுவிடுதி இன்று திறப்பு

(கொழும்புத்துறை)

கைதடி அரசினர்ஆயுர்வேத வைத்தியசாலயில் புதிதாக மகப்பேற்று விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்த மகப்பேற்று விடுதித் திறப்புவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 1.45 மணி அளவில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன என்று வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (24)

## காணாமற் போனோர் தொகை வலி. வடக்கில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போயுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் அதேவேளையில் இவர்களை மீட்டெடுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சிகள் தொடர்ந்தும் தோல்விகளே கிடைத்துள்ளன.

வீமன்காமம் வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் கந்தையா (வயது 75) கந்தையா வள்ளியம்மை (வயது 75) ஆகியோரும் வறுத்தலைவிளானைச் சேர்ந்த வேலாயுதம் பிள்ளை சேகரன் (வயது28) என்பவரும் சிறிலங்கா இராணுவ சூன்யப்பகுதிகளில் இருந்து இதுவரை திரும்பவில்லை

இவர்களுடன் மொத்தம் 65 பொது மக்கள் காணாமல் போயுள்ளனர்.

இவர்களை மீட்டுத்தரும்படி செஞ்சிலுவைச் சங்கத்திடம் இவர்களின் உறவினர்கள் விண்ணப்பித்த போதிலும் இவர்களைப் பற்றிய எந்த தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. இவர்களைப் பற்றி செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலகத்தின் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை பதில் எதுவும் அவர்களிடம் இருந்து வரவில்லை. என்றும் கூறப்படுகிறது. (க)

**பல முனைகளில்**

பகுதியை நோக்கியும், தச்சன் காட்டுச் சந்தியில் இருந்து அம்பனைப் பகுதியை நோக்கியும், மாவிட்டபுரம், கட்டுவன் பகுதிகளிலிருந்து தெல்லிப்பளைப் பகுதியை நோக்கியும், வசாவிளானிலிருந்து புன்னாலைக் கட்டுவன் பகுதியை நோக்கியும் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் ஒருமணி நேரம்வரை நடந்த உக்கிர மோதலினால் தொடர்ந்து முன்னேற முடியாத இராணுவம் பலத்த இழப்புக்களுடன் முகாமுக்குத் திரும்பிச்சென்றது.

இந்தத் தாக்குதலின் போது இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும்தெரியவில்லை. (ச)

**சிதைவுற்ற**

துப்பரவு வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. மாவீரர் நாள் நிகழ்வுகளின் போது யாழ். நகர் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதற்காகஇத்தவேலைகளை காலையும் மாலையும் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

சுத்திகரிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தும் வாகனங்களுக்கு டீசல் பற்றாக்குறையாக இருப்பதனால் செஞ்சிலுவைச்சங்கத்திடம் தேவையான அளவு டீசலைப் பெற்றுத்தரும்படி விண்ணப்பித்த போதிலும் இதுவரைகிடைக்கவில்லை. இதனால் தற்போதைக்கு பகிரங்க சந்தையில் டீசலைப்பெற்று இந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்கு யாழ். மாநகர ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

**புலிகளின்**

சர் வாகனத்தில் வந்த சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலால் காயமுற்ற நிலையில் நான்கு இராணுவத்தினரும் ஓடி விட்டனர். அவர்கள் வந்த லான்குரேசர் வாகனம் முற்றாக சேதமடைந்தது.

இராணுவத்தினரிடமிருந்து ரி 81மகசின்3, ஏ கே. கோல்சர்-1, ரவைகள் 100, ஹெல்மட்-1, ஜே ஆர். கிரனேற்-2 ஆகிய ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (மு)

**யாழ். ஆஸ்பத்திரி**

இடுவதற்கு ஒரு அனுமதிப் பத்திரம் மட்டுமே வழங்கப் படுகிறது. இதனால் பார்வையிடுவதற்கு வருபவர்கள் ஒருவர் மட்டும் பார்வையிடும் போது ஏனையவர்கள் நீண்ட நேரம் வெளியே காத்திருக்கின்றனர். இந்த நடைமுறையைக் கண்டு பெரும்பாலானவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பார்வையிடும் நேரங்களாக காலை 6-30 முதல் 7-30 வரை, நண்பகல் 12-00 முதல் 1-00 மணி வரை, மாலை 4-00 முதல் 5-30 மணிவரை என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (க)

**வடபகுதி**

ரிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த மாத நடுப்பகுதியில் வட மாகாணத்திற்கு மின்சாரம் தடைப்பட்டதைத் தொடர்ந்து அறிக்கை ஒன்று தயாரித்து வடமாகாண மின்சாரசபைத் தலைவர் கொழும்பு மின்சாரசபைத் தலைமையகத்திற்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு உயர்ஸ்தானிகர் ஆலயமூடாக செய்தி அனுப்பப்பட்டது. இதேபோல தற்போது கொழும்பில் தங்கி உள்ள யாழ். அரசாங்க அதிபருக்கும் செய்தி அனுப்பப் பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் பகுதிக்கு இவ்விடயம் பற்றி தெரிவிப்பதாகவும் இருந்தது. இவற்றைவிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவும் மின்சாரம் தடைப்பட்ட விடயம் குறித்து கூட்டுப்படைகள் தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. இருந்தும் எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என மின்சாரசபை அதிகாரி கூறினார்.

இது இவ்வாறிருக்க நேற்று யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன் கொழும்பிலுள்ள யாழ் அரச அதிபருடன் தொடர்பு கொண்டு இவ் விடயம் பற்றிக் கேட்டபோது எதிர்வரும் பதினைந்தாம் திகதி வட பகுதிக்குத் திரும்புவதற்கு முன் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடனும் மேலும் மின்சாரசபை அதிகாரிகளுடனும் ஆலோசித்து விட்டு வருவதாக யாழ். அரச அதிபர் கூறியுள்ளாரென நேற்று மேலதிக அரசாங்க அதிபரை சந்தித்த போது கூறினார்.

கூட்டுப்படை தலைமையகம் அசட்டை

இருந்தும் வடபகுதி அதிகாரிகள் யாழ். மாவட்டத்துக்கு மின்சாரம் கொண்டு வருவதற்கு பகிரதப்பிரயத்தனம் செய்யும் அதேவேளை இம் முயற்சிகளை கூட்டுப்படைகள் தலைமையகம் கண்டும் காணாத நிலையில் இருந்து வருவதாக யாழ்ப்பாணத்தில் உள்ள மின்சார சபை மற்றும் யாழ். செயலக அதிகாரிகள் மட்டத்தில் பரவலாகப் பேசப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

**சிவில் நிர்வாகப்**

சிவில் நிருவாகத்தை அமுல் நடத்தும் போர்வையில் சிங்களக்குடியேற்றத்தைத் தீவிரப்படுத்தும் வேளை தமிழ் மக்களின் வீடுகள் புல்டோசரின் துணைகொண்டு அழிக்கப்படுகின்றன. மூதூரில் கட்டைபறிச்சான் பகுதியில் மட்டும் 1057 வீடுகள் அழிக்கப் பட்டன. தற்போது கங்குவேலி, புளியடிச்சோலை ஆகிய பாரம்பரிய தமிழ்விவசாயக்கிராமங்களில் இருந்த பாடசாலைகள், ஆலயங்கள் புல்டோசரால் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன.

இராணுவத்தினரின் உத்தரவின் பேரில் மீண்டும் தமது சொந்தஇடங்களுக்குச்சென்ற இந்த மக்கள் மீண்டும்கிராமத்தில் வாழ முடியாத நிலையைக் கண்டுள்ளனர். இவர்களின் கிணறுகளில் கிருமிநாசினிகள் ஊற்றப்பட்டுள்ளன.

உயிராபத்தின் காரணமாக இடம் பெயர்ந்து சென்றவர்களின் இடத்திற்கு வெளிமாவட்டச் சிங்களவர்களை நியமிப்பதுடன் அவர்களுக்கான குடியேற்றம் என்ற வகையில் புதிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சிறிமாபுர போன்ற பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியேற்றப்பட்டனர். தற்போது மீன்பிடி அமைச்சை திருமலைக்கு மாற்றுவதன் மூலம் கடற்றொழில் உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில் சிங்கள அதிகாரிகள்நியமிக்கப்பட்டு அவர்களுக்காகக் குடியேற்றங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. 9-11-90 அன்றைய சிறிலங்கா வானொலிச் செய்தியும் இதை உறுதிப்படுத்துகின்றது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட படுகொலைகள் பற்றியும், தடுப்புமுகாம்களில் மக்கள் படும் துயரங்கள் பற்றியும், மக்கள் தொற்று நோய்களால் படும் அவஸ்தைகள் பற்றியும் தெளிவாக வெளிவந்துள்ளன. இந்தசம்பவங்கள் பெரும்பாலானவை முன்னர் எமது பத்திரிகையில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

**திருமலை**

வெளியேற்றி அவ்வீடங்களிற்குச் சிங்களவர்களை அமர்த்துவதற்கான நடவடிக்கையாகும். இப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினதும், முஸ்லிம் ஊர்காவற்படையினதும் கொடூரங்கள் ஓயாதநிலையில் இக்கட்டாய அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31–ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.